Sri M. C. MUTHUKUMARASWAMY : இந்த புறம்போக்கு நிலங்களை ஒதுக்கும் விஷயமாக ஆங்காங்கு இருக்கின்ற பஞ்சாயத் போர்ட்டின் அனுமதி வேண்டுமென்று இருக்கிறபடியினால், இக்காலத்திற்கு அது ஏற்றபடி இருக்கிறதாக சொல்ல முடியாது. ஆகையால் ரெவன்யூ டிப்பார்ட்மெண்டே கொடுக்கலாம் என்று முடிவுசெய்ய சர்க்கார் பரிசீலிக்குமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : பஞ்சாயத் போர்டு சம்பந்தமாக அவர்கள் அனுபவத்தில் இருக்கின்ற நிலங்களை எடுக்கும்பொழுது அவர்களையும் கலந்து ஆலோசித்து அவர்களுடைய அனுமதியையும் பெறவேண்டியது அவசியமாகிறது.

Sri A. GOVINDASAMY : எனக்கு வந்திருக்கின்ற கேள்வித்தாளில் கல்பட்டி என்பது ஆங்கிலத்தில் கல்பாதி என்றிருக்கிறது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் சொன்னதில் வேறு ஏதாவது மாறுதல் உண்டோ ? கல்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் ஒதுக்கியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அது ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் ஏற்பட்ட மாறுதல்தான். கிராமம் கல்பட்டுதான். அதில் சந்தேகமில்லை. மற்றபடியுள்ள விவரங்களுக்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை.

Sri M. JAGANNATHAN : விழுப்புரம் தாலூகாவில் கல்பட்டு கிராமத்தில் ஹரிஜன மக்களும் மாஜி ராணுவத்தினரும் சில இடங்களில் விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது அவர்களை அந்த தரிசு நிலங்களிலிருந்து இந்த அரசாங்கத்தார் வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக வேறு தரிசு நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ? அவர்களை வெளியேற்றினதற்கு என்ன காரணம் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அவர்களை வெளியேற்றினது என்ன காரணத்திற்காக என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. (டேங்க் பெட்டில்) ஏரிக்கரைகளிலும் ஆயக்கட்டு நிலங்களுக்கு விரோதமாக இருக்கக்கூடிய இடங்களிலும் இருக்கிறவர்களை வெளியேற்றத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் வெளியேற்றினவர்களுக்கு வேறு இடங்களில் நிலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

Sri K. B. S. MANI : இந்த ஹரிஜனங்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் நிலங்களை அவர்கள் சரியான விதத்தில் அனுபவிக்காமல் இருந்த போதிலும் ஏதோ ஒரு காரணத்திற்காக கிராம உத்தியோகஸ்தாகளின் மனத்தாங்கல் காரணமாக இவ்விதம் கொடுக்கப்பட்ட நிலங்களை மாற்றுவதற்காக இந்த நிலங்கள் எல்லாம் மேய்ச்சல் நிலங்கள் என்றெல்லாம், இருபது, இருபத்திஐந்து வருடங்களுக்கு முன்புளள புத்தகங்களிலிருநது எடுததுச்சொல்லி அதை மாற்றி வருகிறார்கள். ஆனால் இந்த நிலங்களில் அந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை செலவு செய்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் அவர்களுக்கு அரசாங்கம் தவக்கமன்னியில் கொடுக்க முன்வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : மேய்ச்சல் நிலங்கள், வாய்க்கால் ஏரிகள், புறம்போக்கு நிலங்கள் இவைகளை எல்லாம் அடமானம் செய்து கொடுப்பதற்கில்லை. அப்படி இல்லாத நிலங்களை அடமானம் செய்து கொண்டு வருகிறோம்.

Daily allowance to last grade servants.

*406 Q.—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Finance be pleased to state the action taken by the

[25th March 1958

Government on the recommendation made by the Collector's Conference held in October 1957 to raise the daily allowance of peons from Re. 0–12–0 to Rs. 1–4–0 while on tour?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government have issued orders enhancing the daily allowance of peons from Re. 0.75 to Rs. 1·25.

SRI N. K. PALANISAMI: இந்த ரூ. 1–4–0 எந்த மாதத்திலிருந்து அமுலாகிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து.

SRI N. MAHALINGAM: இதே சலுகையை கிராம உத்தியோகஸ்தர் களுக்கும் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI. C. SUBRAMANIAM: அது வேறு அடிப்படையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI D. S. AUTHIMOOLAM: போலீஸ் கான்ஸ்டபிளுக்கும் இந்த படி உயர்வு உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்கு தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY: இந்த பஞ்சப்படி உயர்வு ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அது ஸ்தலஸ்தாபனங்கள் செய்ய வேண்டிய வேலை.

SRI M. JAGANNATHAN: எந்த தேதியிலிருந்து இந்த உத்தரவ பிறப்பிக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

SRI N. K. PALANISAMI: அதை கொஞ்சம் பார்த்து சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்கு தனிக்கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

MR. SPEAKER: Questions are over.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* EVICTION OF SALT WORKERS FROM THE GOVERNMENT PORAMBOKE LANDS IN TIRUCHENDUR TALUK.

9–10 a.m. SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, திருச்செந் தூர் தாலூகாவில் ஆறுமுகநேரி பகுதியில் தாராங்கதாரா கம்பெனியார் சோடா உப்பு, மற்றும் ரசாயனப் பொருள்கள் தயாரிப்பதற்கு வேண்டிய ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைக்காக ஏறத்தாழ 3,000 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுகிறது. தேவைப்படுகிற நிலங்கள் எல்லாம் பட்டா நிலங்களாகவும் அரசாங்கத்தின் நிலங்களாகவும் இருக்கிறது. தரிசாக கிடந்த அந்த சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் உப்பு சாகுபடி செய்வதற்காக சர்க்கார் விளம்பரம் செய்து தூண்டுதல் செய்ததின் பேரில் 12 வருடங்களுக்கு முன்பு அங்குள்ள ஏழை விவசாயிகள் தொழிலாளர்கள் பலர் அங்கு உப்பு பாத்தியை அமைத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஏழை விவசாயிகள்.